2004 பிப்ரவரி 12]

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வாயினாலேயே தூத்துக்குடியில் அதிகமான பால் விற்பனை ஆகிறது என்று சொல்கிறார். அப்படி இருக்கும்போது, திருநெல்வேலி போவதற்குள் பால் கெட்டுவிடும் என்பதால், தூத்துக்குடி மாவட்டத்திலே தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கிராமத்திலோ அல்லது தூத்துக்குடியிலோ அந்த மையம் அமைக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கூட்டுறவு பால் ஒன்றியம் அமைப்பதற்கு உண்டான வாய்ப்புகள் இல்லை என்பதற்கான காரணங்களை ஏற்கெனவே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். பால் விற்பனை அதிகமாக நடக்கிறது. ஆனால் உற்பத்தி எவ்வளவு இருந்தாலும், இப்போது அங்கே இருக்கிற பால் குளிரூட்டும் நிலைய வசதி, பால்பண்ணை வசதி போதுமானதாக இருக்கிற காரணத்தினால் இன்னொரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அங்கே அவசியம் இல்லை என்ற காரணத்தினால், அதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 58, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

58—

சுற்றுலா மையங்கள்

***20372—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறு மற்றும் கழுகுமலையில் சுற்றுலா மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி கயத்தாறு மற்றும் கழுகுமலையில் சுற்றுலா மையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தின் வழிகாட்டியே, ஒன்றுபட்ட தமிழகத்தின் ஒளி விளக்கே, சாதாரண தொண்டனையும் உயர்ந்த இடத்தில் வைத்து அழகு பார்க்கும் எங்கள் அன்னையே, பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் அன்னையே, எங்களின் அசைவுக்கு காலக் கடிகாரமாக விளங்கும் அன்னையே, சுதந்திர இந்தியாவில் சுதந்திர வேட்கையினை உலகிற்கு உணர்த்திய உத்தமத் தியாகிகள் தோன்றி, தங்களின் இன்னுயிரை நீத்த ஒட்டப்பிடாரம் தொகுதியிலே வீரபாண்டிய கட்டபொம்மனை காட்டிக்கொடுத்து தூக்கிலிடப்பட்ட கயத்தாறிலே கட்டபொம்மன் வழிபட்ட அகிலாண்ட ஈஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலையும், கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட அந்த இடத்தையும் சேர்த்து ஒரு சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதோடு, குடவறை கோயிலான கழுகுமலை சுற்றுலா மையமாக மாற்றப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதற்கு எங்கள் தொகுதி மக்களின் சார்பாக அன்பு கலந்த நன்றியை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன். இந்திய அரசு கிராமிய சுற்றுலாத் தலமாக தமிழகத்திலே கழுகுமலையைத் தேர்வு செய்து ரூ.2.5 கோடியினை ஒதுக்கீடு செய்ததாக அறிகிறேன்; அதை உடனடியாக பெற்றுத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் பேருந்துகள் நிறுத்தும்

2004 பிப்ரவரி 12]

இடம், மலைப் பகுதியில் மரம் நடுதல், சாலை மேம்பாடு, விளக்கு வசதி, சாலையோர வசதி, நினைவிடங்கள் புனரமைப்பு செய்ய ரூ.48.68 இலட்சம் செலவில் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டத்தின் சுற்றுலா சிறப்பியல்புகளை பயணிகளுக்கு எடுத்துரைக்க திருநெல்வேலியில் சுற்றுலா அலுவலகம் ஒன்றும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் தகவல் மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் துறையின் மூலம் ஆண்டுதோறும் கட்டபொம்மன் நினைவு விழா நடத்தப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி சி. கனகதாரா.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தளத்து மக்களைக் காத்து, அறிவியல் தமிழை வளர்த்து, வான்மழை போற்றும் தேசிய தலைவியாம் மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியிலே என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியிலே அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அதன் அருகில் ஊட்டல்மலை என்ற ஒன்று இருக்கிறது. அதில்...(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி சி. கனகதாரா, தனியாகக் கேள்வி போடுங்கள்.

செல்வி சி. கனகதாரா: சுற்றுலா சம்பந்தமானதுதான். அதிகமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனியாக கேள்வி போடுங்கள். இது ஒட்டப்பிடாரம், கழுகுமலை.

செல்வி சி. கனகதாரா: முக்கியமான ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.